நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 362/2025

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வேணுகோபால் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுசாமி |
| கிராமம் | : | கோனூர், பாரதி நகர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 6 |
| வயது | : | – |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 25–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.35 PM )

1. நான் தற்போது தொளசம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேட்டுர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 13.09.2020 ம் வருடம் இரவு 08.30 மணிக்கு

மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த அடிதடி இண்டிமேசன் பேரில் 14.09.2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மதுவந்தி என்வரிடம் அடிதடி பிரச்சனை சம்மந்தமாக வாக்குமூலம் பெற்றுவந்தேன்.

2. மேட்டூர் காவல் நிலைய மனு எண். 87/2020 கொடுத்து விசாரணை முடியாததால் மனு எண்ணை மறுபரிசீலனை செய்து 19.09.2020 ம் தேதி 18.00 மணிக்கு மேட்டூர் காவல் நிலைய குற்ற எண் 538/2020 ச.பி. 294(பி), 323 வழக்கு பதிவுசெய்தேன்.

3. பின்னர் சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளின் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். ( **மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் அதசாஆ.2 மற்றும் அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சம்பவயிட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அதன்பிறகு எனது விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் விக்னேஸ்வரமூர்த்தி என்பவரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். நான் செய்த புலன் விசாரணை சம்மந்தமாக உதவி ஆய்வாளர் விக்னேஸ்வரமூர்த்தி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்த மதுவந்தி என்பவரிடம் நான் தான் வாக்குமூலம் பெற்றேன். வாக்குமூலத்தை நான் தான் எனது கைப்பட எழுதினேன். 14.09.2020 ம் தேதி எழுதினேன். நான் பதிவுசெய்த வாக்குமூலத்தில் மதுவந்தியின் கையெழுத்துக்கு அருகில் பதிவுசெய்த நேரம் மற்றும் இடம் குறித்து நான் எழுதவில்லை. அவ்வாறு குறிப்பிடுவது வழக்கம் இல்லை.

2. வாக்குமூலத்திற்கு கீழ்பகுதியில் அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவுசெய்யப்பட்ட விவரத்தை எழுதியது நான் தான். இரண்டு கையெழுத்துக்களும் வெவ்வேறு மாதிரி உள்ளது என்றால் சரிதான். சாட்சி

தற்போது வாக்குமூலத்தை தன்னுடன் இருந்த காவலர் ஒருவர் எழுதியதாக மாற்றி சாட்சியம் அளிக்கிறார்.

3. இந்த சம்பவம் தொடர்பாக சம்பவம் நடந்தன்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கப்படவில்லை. நான் வாக்குமூலம் பதிவுசெய்த தேதியிலிருந்து 5 நாட்கள் கழித்துத்தான் வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரிதான். மதுவந்தி 13.09.2020 ம் தேதி 20.30 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 3 நாட்கள் சிகிச்சையில் இருந்துள்ளார்.

4. சம்பவம் நடந்த நேரத்திலிருந்து எவ்வளவு நேரம் கழித்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார் என்றால் சாட்சி தற்போது சம்பவம் 20.30 மணிக்கு நடந்ததாகவும், அ.சா.1 மதுவந்தி 21.45 மணிக்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் மாற்றி சாட்சியம் அளிக்கிறார்.

5. சம்பவயிடத்திற்கும் மருத்துவமனைக்கும் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும். 10 நிமிடத்தில் மருத்துவமனைக்கு சென்றுவிடலாம் என்றால் சரிதான். மருத்துவரை நான் விசாரணை செய்யவில்லை. 14.09.2020 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றேன். சம்பவயிடத்தில் ராஜேந்திரன், சந்திரா, ரமேஷ்குமார், சதீஷ், சங்கர், மைக்கேல்பாபு ஆகியோரை விசாரித்தேன்.

6. நான் விசாரித்த மேற்படி நபர்கள் மதுவந்தியின் உறவினர்கள் என்றால் சரியல்ல. அசா.1 மதுவந்தியும், எதிரியும் கணவன் மனைவி என்றால் சரிதான். ஏற்கனவே அவர்களுக்கு இடையே இருந்த பிரச்சனை குறித்து நான் விசாரித்தேன். இதுகுறித்து அனைவரிடமும் விசாரித்தேன்.

7. அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் அசா.ஆ.3 மாதிரிவரைபடம் ஆகியவற்றை என்னுடன் இருந்த தலைமை காவலர் சேகர் என்பவர் தயார் செய்தார். நான் கையெழுத்து செய்தேன். அ.சா.1 மதுவந்தி கெட்டவார்த்தையால் திட்டியதாக சொன்னது வீட்டிற்குள் நடந்தது என்றால் சரியல்ல. வீட்டுவாசலில் நடைபெற்றது.

8. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் இரண்டு அடுக்கு மாடிவீடு உள்ளப்பகுதி

என்றால் சரிதான். அதனைச்சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளதென்றால் சரிதான். நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் நான் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

9. நான் சொன்ன தேதியில் மதுவந்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றாலும், சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்ட நாளிலிருந்து சுமார் 7 நாட்கள் கழித்து இப்படியான பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மதுவந்திக்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த குடும்ப பிரச்சனை காரணமாக கொடுக்கப்பட்ட பொய் புகாரை பெற்று நான் சரிவர விசாரணை செய்யாமல் தவறான வழக்கை பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.05.PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**